## NIRF Rankings 2023 | நாட்டின் முதன்மை பொறியியல் கல்லூரியாக சென்னை ஐஐடி தேர்வு; சிறந்த கல்லூரிகளில் பிரசிடென்ஸி 3-ம் இடம்




**புதுடெல்லி:** மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசை கட்டமைப்பு வெளியிட்டுள்ள தகவலின்படி, நாட்டின் முதன்மை பொறியியல் கல்லூரியாக சென்னை ஐஐடி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**பொறியியல் கல்லூரிகளின் தரவரிசை:** மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய கல்வி நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF), நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள், பொறியியல் கல்லூரிகள், நிர்வாகக் கல்வி நிறுவனங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் தரத்தை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அதன்படி, 2023-ம் ஆண்டுக்கான தர வரிசைப் பட்டியலை NIRF வெளியிட்டுள்ளது.

அதன்படி, பொறியியல் கல்லூரிகளில் சென்னை ஐஐடி முதலிடம் பிடித்துள்ளது. 2ம் இடத்தை டெல்லி ஐஐடி-யும், 3ம் இடத்தை மும்பை ஐஐடி-யும் பிடித்துள்ளன. 4-ம் இடத்திற்கு கான்பூர் ஐஐடி-யும், 5ம் இடத்திற்கு ரூர்கீ ஐஐடி-யும், 6ம் இடத்துக்கு

காரக்பூர் ஐஐடி-யும் தேர்வாகி உள்ளன. 7-ம் இடத்தை கவுஹாத்தி ஐஐடியும், 8-ம் இடத்தை ஹைதராபாத் ஐஐடி-யும், 9-ம் இடத்தை திருச்சி என்ஐடி-யும், 10-ம் இடத்தை கொல்கத்தாவில் உள்ள ஜாதவ்பூர் பல்கலைக்கழகமும் பிடித்துள்ளன.

**பல்கலைழக்கழகங்களின் தரவரிசை:** இதேபோல், பல்கலைக்கழக தர வரிசையில் பெங்களூருவில் உள்ள இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சையின்ஸ் முதலிடத்தைப் பிடித்துள்ளது. 2-ம் இடத்தை டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகமும், 3-ம் இடத்தை டெல்லியில் உள்ள ஜாமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழகமும், 4-ம் இடத்தை கொல்கத்தாவில் உள்ள ஜாதவ்பூர் பல்கலைக்கழகமும், 5-ம் இடத்தை வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகமும் பிடித்துள்ளன. மணிபாலில் உள்ள மணிபால் அகாடமி ஆஃப் ஹையர் எஜூகேஷன், கோவையில் உள்ள அம்ரிதா இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, வேலூரில் உள்ள விஐடி, அலிகரில் உள்ள அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம், ஹைதராபாத்தில் உள்ள ஹைதராபாத் பல்கலைக்கழகம் ஆகியவை முறையே 6 முதல் 10 வரையிலான இடங்களை பிடித்துள்ளன.

**நிர்வாகக் கல்வி நிறுவனங்களின் தரவரிசை:** நிர்வாகக் கல்வி வழங்கும் நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியலில், அகமதாபாத் ஐஐஎம் முதலிடம் பிடித்துள்ளது. 2-ம் இடத்தை பெங்களூரு ஐஐஎம்-மும், 3ம் இடத்தை கோழிக்கோடு ஐஐஎம்-மும் பிடித்துள்ளன. கொல்கத்தா ஐஐஎம், டெல்லி ஐஐடி, லக்னோ ஐஐஎம் ஆகியவை முறையே 4,5,6 இடங்களை பிடித்துள்ளன. மும்பையில் உள்ள என்ஐடிஇ 7-வது இடத்தையும், இந்தூர் ஐஐஎம் 8-வது இடத்தையும், சேவியர் லேபர் ரிலேஷன்ஸ் இன்ஸ்டிடியூட் 9-வது இடத்தையும், மும்பை ஐஐடி 10-வது இடத்தையும் பிடித்துள்ளன.

**கல்லூரிகளின் தரவரிசை:** கல்லூரிகளுக்கான தரவரிசைப்பட்டியலில் டெல்லியில் உள்ள மிராண்டா ஹவுஸ் கல்லூரி முதலிடம் பிடித்துள்ளது. டெல்லியில் உள்ள இந்து கல்லூரி 2-வது இடத்தையும், சென்னையில் உள்ள பிரசிடென்ஸி கல்லூரி (மாநிலக் கல்லூரி) 3-வது இடத்தையும், கோவையில் உள்ள பிஎஸ்ஜிஆர் கல்லூரி 4-வது இடத்தையும், கொல்கத்தாவில் உள்ள செயின்ட் சேவியர் கல்லூரி 5-வது இடத்தையும் பிடித்துள்ளன. புதுடெல்லியில் உள்ள ஆத்ம ராம் சனாதர் தர்ம கல்லூரி, சென்னையில் உள்ள லயோலா கல்லூரி, ஹவுராவில் உள்ள ராமகிருஷ்ணா மிஷன் வித்யாமந்திர், டெல்லியில் உள்ள லேடி ஸ்ரீராம் கல்லூரி, டெல்லியில் உள்ள கிரோரி மால் கல்லூரி ஆகியவை முறையே 6 முதல் 10 வரையிலான இடங்களை பிடித்துள்ளன.

## ட்விட்டரின் புதிய சிஇஓ ஆக லிண்டா யாக்காரினோ இன்று பொறுப்பேற்பு?



**சான் பிரான்சிஸ்கோ:** ட்விட்டர் நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக லிண்டா யாக்காரினோ இன்று பொறுப்பேற்றுக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த மாதம் ட்விட்டரின் உரிமையாளர் எலான் மஸ்க்

இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதை ட்வீட் மூலம் குறிப்பிட்டுள்ளார் லிண்டா. இதை அமெரிக்க நாட்டின் செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளது.

கடந்த ஆண்டு ட்விட்டர் நிறுவனத்தை வாங்கி இருந்தார் மஸ்க். பயனர்கள் தங்களது கருத்துகளை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இந்த தளத்தில் பல்வேறு அதிரடி மாற்றங்களை அவர் செய்தார். பயனர்களுக்கு சந்தா கட்டணம் தொடங்கி ஊழியர்களை பணியில் இருந்து நீக்கியது என அவரது நடவடிக்கைகள் நீண்டன. இந்தச் சூழலில் லிண்டாவை புதிய சிஇஓ என மஸ்க் அறிவித்தார். அதோடு ட்விட்டர் நிறுவனத்தின் நிர்வாக தலைமை மற்றும் சிடிஓ என தனது செயல்பாடு இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

மஸ்க்கின் ட்விட்டர் 2.0-வை உருவாக்க தான் உறுதியுடன் இருப்பதாகவும் லிண்டா அப்போது தெரிவித்திருந்தார். ட்விட்டரின் வணிக செயல்பாடுகளை இவர் கவனிப்பார் என தெரிகிறது.

என்பிசி யுனிவர்சல் நிறுவனத்தில் தன்னுடன் பணிபுரிந்த ஜோ பெனாரோச்சை அவர் ட்விட்டர் நிறுவனத்தில் பணியமர்த்தியுள்ளார். இது லிண்டா மற்றும் ஜோ தரப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளது. ‘ட்விட்டர் 2.0-வை கட்டமைப்பதை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன்’ என ஜோ தெரிவித்துள்ளார். அவரும் இன்றைய நாளில் ட்விட்டர் நிறுவனத்தில் இணைகிறார்.

**யார் இவர்? -** லிண்டா யாக்காரினோ 10 ஆண்டுகளுக்கும் மேலாக என்பிசி யுனிவர்சல் நிறுவனத்தில் பணிபுரிந்தவர். நிறுவனத்தின் விளம்பர செயல்திறனை அளவிடுவதற்கான ஒரு தொழில்துறை வழக்கறிஞராக அவர்

இயங்கினார். மேலும் அந்நிறுவனத்தின் விளம்பர விற்பனையின் தலைவராகவும் இருந்துள்ளார். டர்னர் என்டர்டெயின்மென்ட் நிறுவனத்தில் சுமார் 19 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவமும் கொண்டவர். அவர் பென்சில்வேனியா பல்கலைக்கழக முன்னாள் மாணவர்.

## மீண்டும் மஞ்சப்பை இயக்கத்தில் மக்கள் அக்கறையுடன் பங்கேற்க வேண்டும்: முதல்வரின் உலக சுற்றுச்சூழல் தின வாழ்த்து

**சென்னை:** அளவற்ற, தேவையற்ற நெகிழிப் பயன்பாட்டை எதிர்த்து நாம் தொடங்கிய மீண்டும் மஞ்சப்பை இயக்கத்தில் மக்கள் அக்கறையுடன் பங்கேற்க வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

ஜூன் 5-ம் தேதியான இன்று உலக சுற்றுச்சூழல் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனிடையே, உலக சுற்றுச்சூழல் நாளையொட்டி, முதல்வர் ஸ்டாலின் இன்று தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்: "இந்த ஆண்டுக்கான உலக சுற்றுச்சூழல் நாள் மையக்கருவாக நெகிழி மாசுபாட்டை வெல்லுங்கள் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அளவற்ற, தேவையற்ற நெகிழிப் பயன்பாட்டை எதிர்த்து நாம் தொடங்கிய மீண்டும் மஞ்சப்பை இயக்கத்தில் மக்கள் அக்கறையுடன் பங்கேற்க வேண்டும். மக்காத் தன்மையுடைய பிளாஸ்டிக் கழிவுகளை முறையாகப் பிரித்துப் போடவேண்டும்." என முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## இன்று உலக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தினம்: பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்க நடவடிக்கை - மக்களுக்கு பொது சுகாதாரத்துறை இயக்குநர் அறிவுறுத்தல்



**சென்னை:** சுற்றுச்சூழலை பாதுகாக்க பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாவட்ட துணை சுகாதாரத்துறை இயக்குநர்களுக்கு பொதுசுகாதாரத்துறை இயக்குநர் செல்வ விநாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: உலக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தினம் ஜூன் 5-ம் தேதி (இன்று) கடைப்பிடிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தினத்தின் இந்த ஆண்டு கருப்பொருள் பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்பதுதான். அதனால், பிளாஸ்டிக் பொருள்கள் பயன்பாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கையை ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

ஒரு கிலோ பிளாஸ்டிக் கழிவுகள், அது மக்கும் காலம் வரைதொடர்ந்து 4.2 கிலோ கரியமிலவாயுவை உற்பத்தி செய்வதற்குவழி வகுக்கிறது. இது புறச்சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தினத்தில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துமாறு சுகாதாரத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**பொது போக்குவரத்து**

தனிப்பட்ட முறையிலும், அலுவலகங்களிலும் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அலுவலகங்களில் பிளாஸ்டிக் தட்டுகள், குவளைகள், பாட்டில்களுக்கு மாற்றாக வேறு பொருள்களைப் பயன்படுத்தப்படுவதையும், உடல் ஆரோக்கியத்துக்கு நடைபயிற்சியையும் ஊக்குவிக்க வேண்டும். காற்று மாசுபாட்டைத் தவிர்க்க பொது போக்குவரத்தையும், மிதிவண்டியையும் பயன்படுத்தலாம். பொது மக்களிடையே பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

மின் சிக்கனம், தண்ணீர் சிக்கனம் மற்றும் உணவுப் பொருள்களை வீணாக்காமல் உரமாகப் பயன்படுத்துதல் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## காளையார்கோவிலில் பாண்டியன் கோட்டையில் கீறல் குறியீடுகளுடன் பானை ஓடுகள் கண்டெடுப்பு



**சிவகங்கை:** சிவகங்கை தொல்நடைக்குழு நிறுவனர் புலவர் காளிராசா, தலைவர் சுந்தரராஜன், செயலாளர் நரசிம்மன், கள ஆய்வாளர் சரவணன் ஆகியோர் காளையார்கோவிலில் உள்ள பாண்டியன் கோட்டை பகுதியில் ஆய்வு செய்தனர். அப்போது கீறல் குறியீடுகளுடன் பானை ஓடுகளை சிவகங்கை தொல்நடைக் குழுவினர் கண்டெடுத்தனர்.

இதுகுறித்து புலவர் காளிராசா செய்தியாளர்களிடம் கூறியதாவது: புறநானூற்று பாடலில் இடம்பெற்ற சங்க இலக்கிய சிறப்புமிக்க பாண்டியன் கோட்டை காளையார்கோவிலில் உள்ளது. தற்போது பாண்டியன் கோட்டை சிதிலமடைந்த நிலையில், ஆழமான அகழி, நீராவி குளம் போன்றவை உள்ளன. இக்கோட்டை மேடு 37 ஏக்கர் பரப்பில் வட்ட வடிவில் அமைந்துள்ளது.

மேலும், இக்கோட்டையின் கிழக்கு பகுதியில் காவல் தெய்வமாக முனீஸ்வரர் கோயிலும், தெற்கு பகுதியில் வாள்மேல் நடந்த அம்மன் கோயிலும் உள்ளன. பாண்டியன் கோட்டை பகுதியில் ஏற்கனவே சங்க கால செங்கல் எச்சங்கள், கூரை ஓடு எச்சங்கள், மண்ணால் ஆன உருண்டைகள், வட்டச் சில்லுகள், தமிழி எழுத்தில் பெயர் பொறித்த பானையோடு ஆகியன கிடைக்கப்பெற்றன.

தற்போது மூன்று பானை ஓட்டில் கீறல் குறியீடுகள் கண்டெடுக்கப்பட்டன. ஒன்றில் ஆங்கில எழுத்து இசட் போன்றும், மற்றொன்றில் முக்கோண வடிவில் கீழே கால்கள் வரையப்பட்டதை போன்றும், மூன்றாவதில் மீன் அல்லது வில்லம்பின் முனை போன்றும் உள்ளது.

மேலும், அழுத்தும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அழகான வேலைப்பாடுடைய பானைகளை வடிவமைத்துள்ளனர். ஒரு பானை ஓட்டின் மேற்பகுதியில் பாயை விரித்து வைத்தது போல் உள்ளது. இதுகுறித்து விரைவில் ஆய்வு நடத்தப்படும் என தொல்லியல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வாறு அவர் கூறினார்.

## மாநில சீனியர் நீச்சல் போட்டி: பெனடிக்டன், சக்தி சாம்பியன்



77-வது மாநில சீனியர் நீச்சல் போட்டிகள் சென்னை வேளச்சேரியில் உள்ள நீச்சல்குள வளாகத்தில் நடைபெற்றது. இதன் கடைசி நாளான நேற்று நடைபெற்ற ஆடவருக்கான பிரஸ்ட்ரோக் நீச்சலில் ஏசஸ் அணி வீரர் தனுஷ் சுரேஷ் பந்தய தூரத்தை 1 நிமிடம் 03.81 வினாடிகளில் கடந்து தனது பழைய சாதனையான 1 நிமிடம் 04.08 வினாடிகள் என்பதை முறியடித்து புதிய மீட் சாதனை படைத்தார். அனைத்து போட்டிகளின் முடிவில் ஆடவர் பிரிவில் பெனடிக்டன் (டி.டி.எஸ்.ஏ. திருநெல்வேலி), மகளிர் பிரிவில் பி.சக்தி (அன்சா துபாய்) தலா 33 புள்ளிகளை கைப்பற்றி தனிநபர் பட்டம் வென்றனர். ஏசஸ் அணி 211 புள்ளிகளை கைப்பற்றி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

## தங்கம் வென்றார் ஹீனா மல்லிக்



யு-20 ஆசிய தடகள சாம்பியன்ஷிப் தென் கொரியாவில் உள்ள யெச்சியோன் பகுதியில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான 400 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் ஹீனா மல்லிக் பந்தய தூரத்தை 53.31 விநாடிகளில் கடந்து தங்கப் பதக்கம் வென்றார். ஆடவருக்கான வட்டு எறிதலில் இந்தியாவின் பரத்பிரீத் சிங் 55.66 மீட்டர் தூரம் எறிந்து தங்கம் வென்று அசத்தினார்.

மகளிருக்கான 5 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் அன்டிமா பால் பந்தய தூரத்தை 17:17.11 விநாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கம் பெற்றார். மகளிருக்கான 100 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் அபிநயா ராஜராஜன் பந்தய தூரத்தை 11.91 விநாடிகளில் கடந்து இறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

EVA STALIN IAS ACADEMY